# புதுச்சேரி நகராட்சி
# தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (DAY-NULM)
# புதுச்சேரி

## நகர சாலையோர வியாபார குழு (Street Vendors Town Vending Committee) உறுப்பினர் தேர்தல் அறிவிப்பு.

புதுச்சேரி தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரம் மற்றும் தெருவோர வியாபாரத்தை ஒழுங்குபடுத்துதல்) விதிகள், 2017 மற்றும் தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தைப் பாதுகாத்தல் மற்றும் தெருவோர விற்பனையை ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 2014 (மத்திய சட்டம் 7 - 2014) இன் படி நிரந்தர நகர வியாபார குழுவின் 12 சாலையோர வியாபாரிகளின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அறிவிப்பு. புதுச்சேரி நகராட்சிக்குட்பட்ட ஏழு (7) சட்டமன்ற தொகுதி வாரியான சாலையோர வியாபாரிகளின் எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் ஒதுக்கீடு, தேர்தல் தேதி, தேர்தல் நடைபெறும் இடம், மற்றும் இதர விவரங்கள் கீழ்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வியாபாரம் செய்யும் பகுதி | தேர்தலுக்கான பகுதி / வாக்காளர்கள் | | வியாபாரிகளின் எண்ணிக்கை | | | ஒதுக்கீடு | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஆண் | பெண் | மொத்தம் | | |
| 1 | ராஜ்பவன் | பகுதி 1 | 104 | 725 | 216 | 941 | பகுதி 1 | 1 SC |
| | | பகுதி 2 | 104 | | | | பகுதி 2 | 1 General |
| | | பகுதி 3 | 104 | | | | பகுதி 3 | 1 BC |
| | | பகுதி 4 | 104 | | | | பகுதி 4 | 1 General |
| | | பகுதி 5 | 104 | | | | பகுதி 5 | 1 SC பெண் |
| | | பகுதி 6 | 104 | | | | பகுதி 6 | 1 General |
| | | பகுதி 7 | 104 | | | | பகுதி 7 | 1 BC பெண் |
| | | பகுதி 8 | 104 | | | | பகுதி 8 | 1 General |
| | | பகுதி 9 | 109 | | | | பகுதி 9 | 1 General பெண் |
| 2 | முத்தியால்பேட்டை உருளையன்பேட்டை நெல்லித்தோப்பு முதலியார்பேட்டை உப்பளம் அரியாங்குப்பம் வில்லியனூர் | பகுதி 10 | 87 | 139 | 124 | 263 | பகுதி 10 | 1 General |
| | | பகுதி 11 | 87 | | | | பகுதி 11 | 1 BC |
| | | பகுதி 12 | 89 | | | | பகுதி 12 | 1 General பெண் |
| | | | 1204 | 864 | 340 | 1204 | | 12 உறுப்பினர் |

தேர்தல் முக்கிய தேதிகள் :-

18 டிசம்பர், 2023 - வேட்புமனு தாக்கல் தொடங்கும் நாள்.
(காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை
உணவு இடைவேளை மதியம் 1:00 முதல் 2 மணி வரை)

22 டிசம்பர், 2023 - வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாள்.
(மாலை 5 மணி வரை)

26 டிசம்பர், 2023 - வேட்பு மனுவின் இறுதி பரிசீலனை நாள்.

28 டிசம்பர், 2023 - வேட்புமனுவை வாபஸ் பெற கடைசி நாள்.
(மாலை 5 மணி வரை)

29 டிசம்பர், 2023 - இறுதி வேட்பாளர் பட்டியல் அறிவிக்கப்படும் நாள்.

10 ஜனவரி, 2024 - தேர்தல் நடைபெறும் நாள் (காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை)
மற்றும் முடிவுகளை அறிவிக்கும் நாள்(மாலை 6 மணி அளவில்).

22 ஜனவரி, 2024 - நகர சாலையோர வியாபாரிகள் குழு முதல் கூட்டம்
நடைபெறும் நாள். (மாலை 4 மணி அளவில்)

குறிப்பு :-

1. **தேர்தல் நடக்க இருக்கும் இடம்:**
   புதுச்சேரி நகராட்சி அலுவலகம், கம்பன் கலையரங்கம், புதுச்சேரி.

2. மேலே குறிப்பிடப்பட்ட 12 உறுப்பினர்களுக்கு போட்டியிட விரும்புவோர் மற்றும் வாக்காளர்கள் புதுச்சேரி நகராட்சியால் வழங்கப்பட்ட தெருவோர வியாபாரிகளுக்கான சான்றிதழ் வைத்திருக்க வேண்டும்.

3. தேர்தலில் பங்கேற்க ஆர்வமுள்ள சான்றளிக்கப்பட்ட தெருவோர விற்பனையாளர்கள் புதுச்சேரி நகராட்சி அலுவலகத்தில் வேட்பு மனு படிவம் 1-யை (Form 1) பெற்றுக்கொள்ளலாம்.

4. பூர்த்தி செய்யப்பட்ட வேட்பு மனுவை கையொப்பமிட்டு புதுச்சேரி நகராட்சி, தேர்தல் நடத்தும் அதிகாரி திரு. M. சாம்பசிவம், வருவாய் அதிகாரி RO-I, அலுவலகம், பஜார் செயின்ட் லாரன்ட் வீதி, புதுச்சேரி-01, அலுவலக நேரத்தில் நேரில் தாக்கல் செய்து ஒப்புகை இரசீது பெற்றுக்கொள்ளவேண்டும். வேட்பு மனுவுடன் டெபாசிட் தொகையாக ரூ.2000-த்துகான தேசியமயமாக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் வரையோலையை (Demand Draft) **"The Commissioner Pondicherry Municipality"** என்ற பெயரில் எடுத்து அவசியம் தவறாமல் இணைத்திடல் வேண்டும். இதில் SC வகுப்பினருக்கு மட்டும் ரூ.1000 டெபாசிட் தொகை செலுத்தினால் போதும். வேட்பு மனு தாக்கல் செய்யும் கடைசி நாள் **22/12/2023** ஆகும்.

5. இத்தேர்தலில் போட்டியிட வேட்பு மனுவை தாக்கல் செய்யும் சாலையோர வியாபாரியை புதுச்சேரி நகராட்சியால் சான்றிதழ் / அடையாள அட்டை பெற்ற இரு சாலையோர வியாபாரிகள் முன்மொழிய வேண்டும்.

6. மேற்குறிப்பிட்ட டெபாசிட் தொகை திரும்ப பெற தக்கதாகும் (Refundable).போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்தலில் பதிவாகும் வாக்குகளில் ஆறில் ஒரு பங்கு வாக்குகள் பெற வில்லையெனில் வேட்பாளர் செலுத்திய டெபாசிட் தொகை திரும்ப வழங்கப்படமாட்டாது.

7. தேர்தலில் போட்டியிட விரும்புவோர் வரையறை செய்யப்பட்டுள்ள 12 பகுதிகளில் எதில் வேண்டுமானாலும் போட்டியிடலாம்.

8. தேர்தல் நாளன்று வாக்களிக்க வருபவர்கள் புதுச்சேரி நகராட்சியால் வழங்கப்பட்ட வியாபார சான்றிதழ் அல்லது அடையாள அட்டையை தவறாமல் எடுத்து வர வேண்டும்.

9. மேலும் விவரங்களுக்கு **http://pdymun.in/section.php#** என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

10. ராஜ்பவன் பகுதியில், ஒன்பது பகுதிகளில் 2 SC (அட்டவணை வகுப்பினர்), 2 BC (பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்), 5 பொது பகுதியாகும். பொது பகுதியில் புதுச்சேரி நகராட்சியால் சான்றளிக்கப்பட்ட தெருவோர வியாபாரி எத்தகைய இனத்தவராக இருந்தாலும் போட்டியிடலாம். இதில் 3 பெண் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் (1 SC பெண் (அட்டவணை வகுப்பினர்), 1 BC பெண் (பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்)), 1 பெண் பொது உறுப்பினர் ஆகும்

11. உருளையன்பேட்டை, நெல்லித்தோப்பு, முதலியார்பேட்டை, உப்பளம், அரியாங்குப்பம் (பகுதி), வில்லியனூர் ஆகிய பகுதிகளில் 2 பொது, 1 BC (பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்) தேர்ந்தெடுக்கப்படவேண்டும். இதில் 1 பெண் (பொது) உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

12. மேலும் உதவிக்கு புதுச்சேரி நகராட்சி அலுவலகத்தில் உள்ள NULM பிரிவின் அலுவலர்களை தொலைபேசி எண்: **0413- 2204502** வாயிலாக தொடர்புகொள்ள வேண்டும்.

(சி. சிவகுமார்)
**ஆணையர்**
**புதுச்சேரி நகராட்சி**